கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில்

# புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்க முடிவு!

## மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை.செப். 17-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் 14 .09.2025 ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி.) மஹாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமையிலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், தொகுதி பொறுப்பாளர்கள் சுப.த. திவாகரன், எஸ்.முத்துக்குமார், எழில்மாறன் செல்வேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும்



நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், வி.என்.மணி, கே.ஆர்.என். போஸ், ஞான. இளங்கோவன், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் த.மணி ராஜன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஜெர்மனி மற்றும் இங்லாந்து நாடுகளுக்கு சென்று தமிழ்நாட்டிற்கு 15516 கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்த்த தமிழ மக்களின் நலனில் எப்போதும் அக்கறை கொண்டுள்ள தமிழக முதல்வர் தலைவர் தளபதி அவர்களை மாவட்ட கழகம் மனதார பாராட்டுகிறது.

தமிழக முதல்வர் தலைவர் தளபதி, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆணையை ஏற்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு செப்டம்பர் 15 அன்று ஒவ்வொரு வாக்குச்சாவடி முன்பும் அந்தந்த வாக்குச்சாவடி முகவர்கள் BLA2 வாக்குசாவடி உறுப்பினர் BLC வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர் BDA 'ஓரணியில் தமிழ்நாடு' தமிழ்நாடு உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு உறுதி மொழி ஏற்பது என தீர்மானிக்கப்படுகிறது.

மண், மொழி, மானம் காப்போம் என்கிற முழக்கத்தோடு 'ஓரணியில் தமிழ் நாடு' என்கிற முனைப்பின் மூலம் மீண்டும் வீடுகள் தோறும் சென்று கழக அரசின் சாதனைகளை சேர்ப்பது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

செப்டம்பர் 17 அன்று கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் பெருந்திரளாக பங்கேற்பது என தீர்மானிக்கப் படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நி.வைேற்றப்பட்டன.

திருச்சி விமான நிலையத்தில் - இன்று

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## தெற்கு மாவட்டத்தினருக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வேண்டுகோள்!

திருச்சி, செப். 17-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் அவர்களுக்கு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படுகிறது என மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

திருச்சி மாவட்டத்தில்



பல்வேறு அரசு நிகழ்ச்சிகள் மற்றும் கழக முப்பெரும் விழாவிற்காக சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று (17.09.25 புதன் கிழமை) காலை 10.00 மணிக்கு திருச்சி வருகை தரும் தமிழக முதல்வர் கழகத் தலைவர் அவர்களை விமான நிலையத்தில் வரவேற்பதற்கு கழக நிர்வாகிகள் அணி திரண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தநிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

அமைச்சர் கே.என்.நேரு தலைமை!

# திருச்சி வருகை தரும் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

## மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி அறிக்கை!

திருச்சி, செப். 17-

திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தி.மு.கழக தலைவரும், தமிழக முதல்வருமான, தளபதி அவர்கள் கரூர் மாவட்டத்தில் நடைபெற இருக்கும் கழக முப்பெரும விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக 17.09.2025ம் நாள் புதன்கிழமை காலை 09.00 மணியளவில் விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தரவிருக்கின்றார். திருச்சிக்கு வருகை தரும் முதல்வர் அவர்



களுக்கு திருச்சி விமான நிலையத்தில் கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேருவின் தலைமையில் திருச்சி மத்திய மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகின்றது.

அதனை தொடர்ந்து பழைய மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார் பின்பு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தந்தை பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு சமூக நீதி நாள் உறுதி மொழி எடுக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்

இந்நிகழ்ச்சிகள் அனைத்திலும் திருச்சி மத்திய மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பளர்கள் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து நம் முதல்வர் அவர்களுக்கு விமான நிலையத்தில் எழுச்சி மிகு வரவேற்பு அளித்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில்

# கோவை மாநகர் - தெற்கு - வடக்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் அணி திரள்வோம்!

## நா.கார்த்திக் - தளபதி முருகேசன் - தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை!

கோவை, செப். 17-

கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் சீரிய ஏற்பாட்டில் கரூரில் செப்டம்பர் 17 இன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் கோவை மாநகர் தெற்கு - வடக்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் கரூரை நோக்கி அணி திரள்வோம் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்கா நல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி அறிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, பண்பாட்டுத் துறையில் பகுத்தறிவு, சமத்துவம், பொருளாதாரத் துறையில் சமதர்மம், அரசியலில் ஜனநாயகம் என்ற







கோட்பாட்டுடன், அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற இயக்கமாம், பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பாராட்டி போற்றி வந்த பழமை லோகம், ஈரோட்டு பூகம் பத்தால் இடியுதுபார் என்று தலைவர் கலைஞரால் கொண்டாடப்பட்ட, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 இன்று கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் சீரிய ஏற்பாட்டில் கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப்புக்கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்ற கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் - தெற்கு - வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத்தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், (BLA2) பாகமுகவர்கள், (BLC) பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் (BDA) உறுப்பினர்கள் அனைவரும்

பொதுமக்களும் கலந்து கொள்ளும் வகையில் முப்பெரும் விழாவை சிறப்பிக்க கரூர் மாநகர் நோக்கி அணி திரள்வோம் என்று அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினர்

# கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் பெருமளவில் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, செப்.17 -

கரூரில் செப்டம்பர் 17 அன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, திராவிட முன்னேற்



றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது. பாவேந்தர் விருது. பேராசிரியர் விருது. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 அன்று கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப் புக்கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்று கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று தருமபுரி மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பேரூர், வட்டக் கழக. வார்டு கழக, கிளைக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் பங்கேற்று, பொதுமக்களும் அதிக அளவில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வத்தலக்குண்டு பேரூர், திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கஸ்பா பகுதி, வேலூர் மாவட்டம்.



நெமிலி பேரூர், இராணிப்பேட்டை மாவட்டம்.



ஊஞ்சலூர் பேரூர், ஈரோடு தெற்கு மாவட்டம்.



பெரணமல்லூர் கிழக்கு ஒன்றியம், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம், திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.